# பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்துவதற்காகச் சரியான பீடைமுகாமை உத்திகளைத் திட்டமிடுவார்




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தேர்ச்சி 1.0

பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்துவதற்காகச் சரியான பீடைமுகாமை உத்திகளைத் திட்டமிடுவார்

## தேர்ச்சி மட்டம் 1.8

பீடைக்கட்டுப்பாட்டுக்குப் பொருத்தமான பீடை கொல்லிகள் பற்றி விசாரணை செய்வார்.

### பீடைகொல்லி

விவசாயத்தில் பயிர்களுக்கோ பயிர்கள் சார்ந்த விளைச்சல்களுக்கோ பாதிப்பை ஏற்படுத்தும் பீடைகளைக் கட்டுப்படுத்த, பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் பீடை கொல்லிகள்.

### பீடைகொல்லிகளின் வகைகள்

- பூச்சி கொல்லிகள்
- களை கொல்லிகள்
- பங்கசுக் கொல்லிகள்

### வெவ்வேறு நியமங்களின் கீழ் பீடை கொல்லிகளை வகைப்படுத்தல்

- பௌதிகத் தன்மைக்கமைய
- தொழிற்பாட்டுக்கமைய
- இரசாயனத்தன்மைக்கமைய

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பீடைகொல்லிகளை அவற்றின் பௌதிகத் தன்மைக்கேற்ப வகைப்படுத்தல்

- தூள் - அக்ரலிக்
- சிறுமணி - டயசினோன் குருணல்
- செறிகுழம்பு (Emulsion) - என்டோசல்பான்
- தூமமாக்கி - பொஸ்பீன்

## பூச்சிகொல்லிகளை அவற்றின் தொழிற்பாட்டிற்கமைய வகைப்படுத்தல்

- வயிற்று நஞ்சு - பாசாண வகை
- தொடுகை நஞ்சு - காபரில்
- தொகுதி நஞ்சு - மெதோவேற்று
- சுவாசம் தடைப்படுத்தி / சுவாச நஞ்சு - மெதயில் புரோமைட்டு

## பூச்சிகொல்லிகளின் இரசாயனத் தன்மைக்கமைய வகைப்படுத்துதல்.

- ஒகனோ குளோரினேற்று - என்டோசல்பான்
- ஒகனோ பொசுபேற்று - டைமெதோவேற்று
- காபமேற்று - காபரில்
- பைரத்திரோயிட்டு - அலெத்திரின்

## பூச்சிகொல்லிகளை அவற்றின் தொழிற்பாட்டிற்கமைய வகைப்படுத்தல்

- வயிற்று நஞ்சு - பாசாண வகை
- தொடுகை நஞ்சு - காபரில்
- தொகுதி நஞ்சு - மெதோவேற்று
- சுவாசம் தடைப்படுத்தி / சுவாச நஞ்சு - மெதயில் புரோமைட்டு

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)

கணிணி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## களை கொல்லிகளை வகைப்படுத்தல்

1. தேர்வுத் தன்மைக்கு அமைவாக
2. தொழிற்பாட்டுக்கு அமைவாக
3. பிரயோகிக்கும் சந்தர்ப்பத்துக்கு அமைவாக

### 1. பீடைகொல்லிகளை அவற்றின் தேர்வுத் தன்மைக்கமைய வகைப்படுத்தல்

- சர்வ களைகொல்லி - டை நைத்திரோ பீனோல்
- தேர்வுக் களைகொல்லி - 2.4 டைக்குளோரோ பீனொக்சி அசெற்றிக்கமிலம் (2.4.D)

### 2. களைகொல்லிகளை அவற்றின் தொழிற்பாட்டிற்கமைய வகைப்படுததல்

- தொடுகைக் களைகொல்லிகள் - பென்ரா குளோபீனைற்று
- தொகுதிக் களைகொல்லிகள் - M.C.P.A

### 3. களைகொல்லிகளை அவை பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பத்துக்கமைய வகைப்படுத்துதல்

- வெளிப்பட முன் வகைக் களைகொல்லிகள் - அற்ரசீன்
- வெளிப்பட்ட பின் வகைக் களைகொல்லிகள் – 3.4 DPA

### பங்கசு கொல்லிகளை அவற்றிலுள்ள செயற்படு இரசாயனப் பதார்த்ததிற்கமைய வகைப்படுத்தல்

- செப்புப் பங்கசு கொல்லிகள்
- கந்தகப் பங்கசு கொல்லிகள்
- சேதனப் பங்கசு கொல்லிகள்
- வட்டப்புழுக் கொல்லிகள்

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)
கணிணி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பூச்சி கொல்லிகளின் நச்சுத்தன்மை (LD50)

யாதேனும் பீடைக் குடித்தொகையின் 50 சத வீதத்தைக் கொல்லுவதற்குத் தேவையான இரசாயனப் பதார்த்த ஊட்டு (Dosage) (பீடையின் உடல் நிறை 1 kg இற்கு இரசாயனப் பதார்த்தத்தின் எத்தனை மில்லிகிராம் தேவை என்பது)

## (LD50)பெறுமானத்திற்கு (நச்சு மட்டத்திற்கு) அமைய பீடைகொல்லிகளை வகைப்படுத்தல்

- அதி பாதகமான (Hazardous)
- உயர் பாதகமான
- நடுத்தர பாதகமான
- சொற்ப பாதகமான

## பீடை கொல்லிகளின் நச்சுத் தன்மையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வகைப்படுத்தல் (லேபலின் கீழ் விளிம்பில் நிறப்பட்டியின் நிறம்)

- அதிக பாதகமான நச்சுத் தன்மை கொண்ட சேர்வைகள் - IA (சிவப்பு நிறப்பட்டி)
- உயர் பாதகமான சேர்வைகள் IB (சிவப்பு நிறப்பட்டி)
- நடுத்தர பாதகமான நச்சுத்தன்மை கொண்ட பீடை கொல்லி - மஞ்சள் நிறப்பட்டி
- மிக குறைவான நச்சுத்தன்மை கொண்ட பீடை கொல்லி - நீல நிறப் பட்டி
- மிகச் சொற்ப பாதகமான நச்சுத்தன்மையைக் கொண்ட வகை - III (பச்சை நிறப்பட்டி)

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)
கணிணி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### பீடைகொல்லி பிரயோகிக்கும் முறைகள்

- இலைகள் மீது தெளித்தல் - களைகொல்லி
- மண்ணுடன் கலத்தல் - பங்கசுக் கொல்லி
- சிவிறுதல் - பூச்சிகொல்லி
- இரை வைத்தல் - பூச்சிகொல்லி
- அழிழ்த்துதல் - பூச்சிகொல்லி
- பூசுதல் - பங்கசுக் கொல்லி

### பீடை கொல்லிகளைக் கையாள முன்னர் பின்பற்ற வேண்டிய முற்பாதுகாப்பு நடவடிக்கைகள்

- பொருத்தமான பாதுகாப்பு உடைகளை அணிதல் - வாய்க்கவசம், கையுறை, தலையணி அணிதல்.
- பீடைநாசினிப் பொதியுறைப் பெயர்ச் சுட்டியை வாசித்துத் தரப்பட்டுள்ள விவரங்களுக்கமையச் செயற்படுதல்.
- சரியான சிவிறி (தெளிகருவி) வகையைத் தெரிவு செய்தல்.
- தெளிகருவி சரியாகத் தொழிற்படுகின்றதா என்பதைச் சோதித்துச் சரி பார்த்துக் கொள்ளல்.
- பொருத்தமான அளவீட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி பீடைகொல்லிக் கலவையை ஒழுங்கு முறைப்படி தயாரித்தல்.
- பீடைகொல்லியைப் பிரயோகிக்கும் வேளையில் மற்றுமொருவரின் உதவியைப் பெறுதல்
- பீடைகொல்லிக் கலவையைக் கலப்பதற்காக ஒரு கோலைப் பயன்படுத்துதல்.
- தெளிகருவியில் சரியான பீச்சுமுனையைத் தெரிவுசெய்து பயன்படுத்துதல்

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பீடைகொல்லி பிரயோகிக்கும்போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகள்

- வானம் தெளிவாக இருக்கும் ஒரு நாளில், காலையில் /மாலையில் பீடைகொல்லி பிரயோகித்தல், கடுமையான காற்று, கடுமையான வெய்யில் போன்ற நிலைமைகள் காணப்படுமாயின் பீடைகொல்லி சிவிறுவதைத் தவிர்த்தல்.
- காற்று வீசும் திசைக்குச் செங்குத்தாகப் பீடைகொல்லி சிவிறுதல்.
- சிவிறும் வேளையில் உணவுகள், பானங்கள் உட்கொள்ளல், வெற்றிலை மெல்லுதல், புகைபிடித்தல் ஆகியவற்றைத் தவிர்த்தல்.
- தெளிகருவியின் பீச்சுமுனை தடைப்படும் வேளைகளில் வாயில் வைத்து ஊதுவதைத் தவிர்த்தலும், நீரில் கழுவி அல்லது மெல்லிய இழையொன்றினைப் புகுத்திச் சுத்திகரித்துக் கொள்ளல்.
- பீடைகொல்லி சிவிறும் வேளையில் வியர்வை துடைப்பதைத் தவிர்த்தல்.

## பீடைகொல்லி பயன்படுத்திய பின்னர் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகள்

- பீடைகொல்லிப் பயன்பாட்டின் பின்னர் வெறும் பொதியிடு பொருள்களை மீளப் பயன்படுத்த முடியாதவாறு நசித்து ஆழத்தில் புதைத்துவிடுதல்.
- தெளித்து முடிந்த உடனேயே பயன்படுத்திய உபகரணங்களை நன்கு கழுவி, அவ்வாறு கழுவிய நீரை நீர்நிலைகளில் சேராதவாறு வேறான ஒரு குழியினுள் இடுதல்.
- உடலையும் தெளிக்கும் வேளையில் அணிந்திருந்த உடைகளையும் சவர்க்காரம் தேய்த்துக் கழுவுதல்.
- பீடைகொல்லி தற்செயலாக கண்ணுடன் தொடுகையுறுமாயின் கண்ணைக் கையால் தொடுவதைத் தவிர்த்தல், பல தடவைகள் சுத்தமான நீரினால் கழுவுதல்.
- தெளிக்கும் வேளையிலோ அதன் பின்னரோ தலைவலி, வாந்தி, மயக்கம் போன்ற அசௌகரிய நிலைமைகள் ஏற்படுமாயின் வைத்தியசாலைக்குச் செல்லல், அவ்வாறு செல்லும்போது பீடைகொல்லிப் பொதியுறையையும் உடன் கொண்டு செல்லல்.

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)
கணினி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk